This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# வாய்மையே சில சமயம் வெல்லும்

www.writersujatha.com

## 1

**வி**ஜயகுமாரின் இயற்பெயர் ‘உயிர்ப்பிச்சை’. பிறந்தது திருநெல்வேலி ஜில்லாவில் மலட்டாற்றுக்கு அருகே ‘ஆகாரம்’ என்றொரு கிராமத்தில். உயிர்ப்பிச்சை என்பது, அவனுக்கு முன் பிறந்த மூன்று குழந்தைகளும் இறந்துபோய்விட்டதால், இந்த மாதிரி பெயர் வைத்தார் அவன் அப்பா வேலாயுதம் பிள்ளை. அதன்பின் மூன்று பெண்கள் பிறந்து எல்லோருக்கும் நாகரிகமாக சரோஜா, குமாரி, புவனா என்றெல்லாம் பெயர் வைத்தாலும் உயிர்பிச்சையை மாற்ற மறுத்துவிட்டார். அப்பாவிடம் பேசவே பயம். அம்மாவிடம் தான் பள்ளியில் படிக்கும்போது பெயர் மாற்றுமாறு கேட்டிருக்கிறான். அவள் சிபாரிசு செய்ததாகத் தெரியவில்லை. அவள் அவனுக்கு மேல் தொடை நடுங்கி, பயந்து பயந்தே அடுப்படியைவிட்டு விலகாமலே ஏழு குழந்தை பெற்றுக் கொடுத்துவிட்டுச் செத்துப் போனாள். விஜயகுமாருக்கு அவள் சின்ன வயசில் பாடிய தாலாட்டு ஒன்று ஞாபகம் இருக்கிறது. ‘தென்காசி எண்ணெய்க்கு உங்கப்பா சீட்டெழுதி விட்டாக’. விஜிக்கு தமிழில் கொஞ்சம் ஆர்வம் உண்டு. பாளையங்கோட்டை சேவியர் காலேஜில் பி.ஏ.படித்தாலும், தெற்கே வேலை தேடாமல் சென்னை நாடிவந்தான். பிச்சைப்பிள்ளை என்று அப்பாவுக்குத் தெரிந்தவருக்குத் தெரிந்த எம்.எல்.ஏ மூலம் வீ.வ.வாரியத்தில் டெலிபோன் ஆபரேட்டர் விளம்பரம் கொடுத்து, பெயரை விஜயகுமார் என்று மாற்றிக் கொண்டான். அப்பாவிடம் இன்னும் தெரிவிக்கவில்லை. விஜயகுமார் என்ற பெயரை வைத்து ஆளைப்பாத்தால் ஏமாற்றம்தான். அதிகம் கவனத்தை ஈர்க்காத சாதாரணக் குடிமகன். கறுப்பு என்று தான் சொல்லவேண்டும். முகத்தில் சிறப்பம்சம் வெண்மையான பற்கள். மூன்று தங்கைக்கும் கல்யாணம் ஆனால்தான் கல்யாணம் என்று அப்பா சொல்லியிருக்கிறார். இப்போதுகூட சிவமயம் என்று போட்டு கார்டு வந்தவுடனே பணம் அனுப்பி விடுவான். இரண்டு தங்கைகளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. மூன்றாவதுதான் (விஜி ஜாடை) இழுத்து அடிக்கிறது. சிக்கனமாகப் பணம் சேர்த்து கோவாபரேடிவ் பாங்க்கில் ரூபாய் ஐயாயிரம் வரை சேர்த்து வைத்திருக்கிறான். தீய பழக்கங்கள் ஏதும் கிடையாது. வீட்டுக்காரரர் ரங்கசாமி அய்யங்கார் வாரியத்தில் சூப்பிரண்டாக இருந்து ரிடையரானவர். அந்தப் பரிச்சயத்தினால் ரூம் கிடைத்தது.

கதை ஆரம்பிக்கும் **ஜூ**ன் மாதம் பதின்மூன்றாம் தேதி கெட்ட காரியங்கள் பண்ணிய சென்னை நகரத்தைப் பவுன் கலர் சூரியன் எழுப்பியது. தூக்கம் நனைந்த கண்களுடன் தொண்ணூறு சதமானம் பதிவிரதா ஸ்தீரிகள் ப்ளாஸ்டிக் பால் வாங்கப் போனார்கள். தேர்தல் சுவரொட்டிகளை வாக்காளர்கள் நின்றபடி நனைத்துக் கொண்டிருந்தார்கள். கண்ணாம்மாபேட்டை பெண்கள் இரவில் குடித்த கணவர்களைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றார்கள். மெயின் ரோடின் விளிம்பில், வயதானவர்கள் நீண்ட ஆயுளை நோக்கி கான்வஸ் கால்களில் ஓடினார்கள். பிள்ளையார் கோயில் தாண்டி மூசாசேட் தெருவில் நுழைந்து, கேபி பிக்சர்ஸ் போர்டைக் கடந்து மத்தியதர மொட்டை வீடுகள் சிலவற்றில் மஞ்சள் வர்ணம் அடித்த பழைய காலத்து வீடு தெரிகிறதே. அதன் கேட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள் நுழையுமுன் நாய் குரைக்கிறது. பாதகமில்லை. அந்த நாய் அப்பிராணி, ஏதோ சாஸ்திரத்துக்குக் குரைக்கும். மோர்க் குழம்பு நக்கும், அப்பளம் தின்னும்.